**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 343/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | திருமதி. செங்கம்மாள் |
| Father's Name/Husband Name: | திரு. சீனிவாசன் |
| Village : | பீல்வாடி |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 55 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 27.11.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1, 2 ஆஜர். எதிரி 3 ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் காட்டு வேலை செய்து வருகிறேன். எதிரிகள் அனைவரையும் தெரியும். கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு செவ்வாய்கிழமை அன்று எனது காட்டில் சோளத்திற்கு உரம் போட்டுக் கொண்டிருந்தேன். எதிரி சகுந்தலா பின்பக்கமாக வந்து எனது தலைமுடியைப் பிடித்து இழுத்தார். எதிரி உதயகுமார் தேவிடியா என்று அசிங்கமாக பேசினார். எதிரி சாரதி என் மூக்கில் குத்தியதும் இரத்தம் கொட்டியது. என்னால் அடி தாங்க முடியவில்லை. நான் என்னை அடிக்காத என்று கும்பிட்டேன். சம்பவயிடத்தில் என் மோதிரம் உருவி கீழே விழுந்துவிட்டது. காயம்பட்ட நான் காவல்நிலையத்திற்கு சென்றேன். காவல்துறையினர் என்னை மருத்துவமனைக்கு செல்லும்படி அறிவுறுத்தினார்கள். பின்னர் நான் எனது மகள் வேம்புவுடன் பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தேன் அங்கு நான் மருத்துவமனையில்

உள்நோயாளியாக சிகிச்சையிலிருக்கும்போது போலிசார் வந்து சம்பவம் குறித்து என்னிடம் விசாரணை செய்தார்கள். நான் அவர்களிடம் எதிரிகளுக்கு எதிராக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது **அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத படிக்கத் தெரியாது. பார்வை மங்கலாகத் தான் தெரியும். எதிரிகளும் நாங்களும் பங்காளிகள் உறவுமுறை என்றால் சரிதான். எங்கள் காடும் எதிரிகளின் காடும் பக்கத்து பக்கத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். எங்கள் இருதரப்பு காடுகளுக்கும் இடையில் வறப்பாக இருந்ததை மாற்றி நான் பெரிய கரையாக அமைத்து விட்டேன் என்றால் சரிதான். நான் மேற்கண்டவாறு வறப்பு கரை போட்டது எதிரிகளின் நிலத்தையும் சேர்த்து கரை போட்டுக் கொண்டேன் என்றால் சரியல்ல. நான் அவர்கள் நிலத்தில் கரை போட்டுக் கொண்டதால் எங்களுக்குள் மன வருத்தம் இருந்தது என்றால் சரியல்ல. புகாரை யார் எழுதினார்கள் என்றால் எனது மகள் வேம்பு. அந்த புகாரை நான் காவல்நிலையத்தில் கொடுத்தேனா என்றால் சரியல்ல போலிசார் மருத்துவமனையிலே பெற்றுக் கொண்டார்கள். நான் காவல்நிலையத்திற்கு செல்லாமல் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்திற்கு சென்றதற்கு குறிப்பு ஏதேனும் போலிசாரால் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. எத்தனை நாள் நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன் என்றால் 5 நாட்கள். இரத்தம் படிந்த சேலையை போலிசார் என்னிடம் பெற்றார்களா என்றால் இல்லை. எனக்கு முன்பாகவே எதிரிகள் என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டார்கள். எனது மகள் எழுதிய புகாரை என்னிடம் படித்துக் காண்பித்தாரா என்றால் படித்துக் காண்பித்தார். 5 வருடம் ஆனதால் தற்போது ஞாபகமில்லை. எனது மகள் புகாரை படித்துக் காண்பிக்கும்போது எந்தெந்த எதிரிகள் எந்தெந்த குற்றம் செய்தார்கள் என்று குறித்து புகாரில் எழுதப்பட்டிருந்ததா என்றாலும் அதில் நான் முதல் விசாரணையில் கூறிய சங்கதிகள் அதில் இருந்ததா என்றால் இருந்தது. போலிசார் என்னை சம்பவம் சம்பந்தமாக விசாரித்தார்களா என்றால் சம்பவம் நடந்த அன்றே மருத்துமனைக்கு வந்து பார்த்தார்கள் ஒரு நாள் விட்டு மறுநாள் வந்து விசாரித்து மனுவினை பெற்றுச்

சென்றார்கள். போலிசார் விசாரணையில் நான் முதல் விசாரணையில் சொல்லிய விவரங்களை தான் கூறினேன் என்றால் சரிதான். மருத்துவரிடம் எனது மூக்கில் இரத்தம் வந்ததை காட்டினேன் மற்றும் எனது மகளுடன் தான் வந்தேன் என்று சொல்லி பதிவு செய்தேனா என்றால் பதிவு செய்தேன். 3வது எதிரி சாரதி என்பவர் மருத்துவராக மருத்துவ கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறார் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் 3ம் எதிரி சாரதி என்பவர் மருத்துவ கல்லூரியில் சேர தகுதி பெற்றிருந்தார் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் எதிரிகள் என்னை அடிக்கவில்லை என்றாலும் எதிரிகளுக்கெதிராக பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் ராம்விலாஸ்பாஸ்வான் கட்சியின் விவசாய அணி மாவட்டத்தலைவர் என்றால் சரிதான். அவர் கட்சியில் இருப்பதால் காவல்நிலையம் சென்று வர பழக்கம் இருக்கிறது என்றால் சரிதான். அந்த செல்வாக்கை வைத்து எதிரிகளுக்கெதிராக பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.